மாநகராட்சிப் பகுதியிலே 6-வது ward, 7-வது ward, 23-வது ward, கோல்டன் நகர் பகுதிகளில் அங்கன்வாடி மையம் தேவைப்படுகிறது. நாங்களும் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து கட்டிக்கொடுத்துள்ளோம். அங்கே போதிய இடவசதி உள்ளது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அங்கன்வாடி கட்டடத்தை அமைத்துத் தர முன்வருவாரா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சமூக நலன்–மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் வடக்கு தொகுதியில், திருப்பூர் மாநகராட்சி வார்டு எண் 6, 7 மற்றும் 23–வது வார்டுகளில் உள்ள கட்டடங்களுக்கும் புதிய நவீனமயமான அங்கன்வாடி கட்டடங்கள் கட்டித் தர வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிக்கை வைக்கிறார்கள். நிச்சயமாக அதற்கு இந்தத் துறை, அரசு அதிகாரிகளோடு இணைந்து கட்டித்தர நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைர் தலைவர்: வினா வரிசை எண் 178, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.எஸ். மணியன், மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

178—

மீன் உலர் கூடம்

***3107—திரு. ஓ.எஸ். மணியன்:**

மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

அ) வேதாரண்யம் தொகுதி, வானவன்மகாதேவி கிராமத்தில் மீன் வலை பின்னும் கூடம் மற்றும் மீன் உலர் கூடம் அமைக்க அரசு முன்வருமா?

ஆ) ஆம் எனில், எப்போது?

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2022 ஏப்ரல் 26]

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்—மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், வேதாரண்யம் தொகுதி, வானவன்மகாதேவி கிராமத்தில் மீன் வலை பின்னும் கூடம் மற்றும் மீன் உலர் கூடம் அமைக்க திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.எஸ். மணியன் அவர்கள்.*

திரு. ஓ.எஸ். மணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெள்ளப்பள்ளம் ஊராட்சியில்தான் அந்த வானவன்மகாதேவி கிராமமும் சேர்ந்தது. தற்போது ரூ.100 கோடியில் துறைமுகம் ஒன்று அங்கு தயாராகிக் கொண்டிருக்கிறது. அதனை மாண்புமிகு அமைச்சர் அவர்களும் நேரில் வந்து பார்வையிட்டார்கள். ஆனால் கடந்த 6 மாதங்களாக அந்தப் பணிகள் துளிகூட நடைபெறாமல் அப்படியே நின்று போயிருக்கின்றன. அந்தப் பணிகள் உடனடியாகத் தொடங்கப்படுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு, அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைர் தலைவர்: *மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகப்பட்டினம் மாவட்டம், வேதாரண்யம் தொகுதி, வானவன்மகாதேவி கிராமத்தில் 112 இயந்திரமயமாக்கப்பட்ட நாட்டுப் படகுகளில் சுமார் 500 மீனவர்கள் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். இங்கு நாளொன்றுக்கு சராசரியாக 2,000 முதல் 2,500 கிலோ மீன்கள் பிடிக்கப்பட்டு வருகின்றன. இவை அன்றைய தினமே விற்பனையாகிவிடுகின்றன. வானவன்மகாதேவி கிராமத்திற்கு அருகிலுள்ள ஏறக்குறைய 500 மீட்டருக்குள் உள்ள வெள்ளப்பள்ளம் மீனவ கிராமத்தில் மீன் வளம் மற்றும் கட்டமைப்புத் திட்ட நிதியின்மூலம் ரூ.100 கோடி மதிப்பீட்டில் ஒரு புதிய மீன்பிடி*

துறைமுகம் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இத்துறைமுகத்தால் பயன்பெறும் கிராமங்களில் வானவன்மகாதேவி கிராமமும் ஒன்றாகும். கடந்த ஆட்சியில் வெள்ளப்பள்ளம் மீன்பிடி துறைமுகத்தை அமைப்பதற்கு உரிய அனுமதிகளைப் பெறாமல், குறிப்பாக ஒன்றிய அனுமதி மற்றும் கண்காணிப்புக் குழுவினுடைய அனுமதியைப் பெறாமல் கட்டுமானப் பணிகளை ஆரம்பித்ததால், பல பணிகளைத் தொடர இயலவில்லை. தற்போது மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுடைய வழிகாட்டுதலின்படி, 21–4–2022 அன்று ஒன்றிய அரசினுடைய அனுமதி மற்றும் கண்காணிப்புக் குழுவினுடைய அனுமதி பெறப்பட்டுள்ளது. எனவே, பணிகளை விரைவில் முடிப்பதற்கான நடவடிக்கைகளை எங்களுடைய துறை மேற்கொண்டு வருகின்றது. எனவே, வெள்ளப்பள்ளம் மீன்பிடி துறைமுகத்தில் அமையவுள்ள வசதிகளை வானவன்மகாதேவி கிராமத்து மீனவர்களும் பயன்படுத்திக்கொள்ளலாம் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.எஸ். மணியன் அவர்கள்.

திரு. ஓ.எஸ். மணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு நன்றி. என்னுடைய தொகுதியில், புட்பவனம் கிராமத்தில் கஜா புயலிலிருந்து இன்று வரை தொடர்ந்து கடல் சேறு மீன்பிடிக்கிற அந்தத் துறைமுக வாசலில் வந்து தங்கிவிடுகிறது; deposit ஆகிவிடுகிறது. கரையிலிருந்து 1 கிலோ மீட்டர் வரையில் அந்தக் களி இருக்கிறது. இதனால் boat–ஐ உள்ளே எடுத்துச் செல்ல இயலவில்லை. அதேபோன்று மீன் பிடித்துவிட்டு கடலில் இருக்கின்ற boat–ஐ கரைக்கு உரிய நேரத்தில் கொண்டு வர இயலவில்லை. அலை எப்போது ஓங்கி அடிக்கிறதோ, அந்த நேரத்தில்தான் எடுத்துவரவும் போகவும் முடிகிறது. இது அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. ஆனால் இந்தப் பிரச்சினையில் அந்த களியை நீக்கி ஒரு வாய்க்காலாவது அமைத்துக் கொடுத்து, படகுகள் கரையிலிருந்து கடலுக்கும், கடலுக்குள் இருக்கிற படகுகள் கரைக்கும் வருவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களை கேட்டு, அமர்கிறேன்.

2022 ஏப்ரல் 26]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல்வது உண்மை. அதனை எங்களுடைய துறையின்மூலம் ஆய்வு செய்து வருகின்றோம். அந்த வகையில் மீனவர்கள் வசதியாக அவர்களுடைய படகுகளைக் கொண்டு வருவதற்காக மாண்புமிகு முதல்வர் அவர்களும் எங்களுக்கு ஆணைகள் வழங்கியிருக்கின்றார்கள். அதற்கான நடவடிக்கைகளை எடுப்போம். ஆனால் அங்கே சென்று பார்க்கின்றபோது நாகப்பட்டினம் மாவட்டம், நம்பியார் நகரில் கடந்த ஆட்சியில் 2018–2019 ஆம் ஆண்டு தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் ரூ.34.30 கோடி செலவில் ஒரு சிறிய மீன்பிடி துறைமுகம் அமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.*

முற்பகல் 10–35

இது தொடர்பாக, நம்பியார் நகரைச் சேர்ந்த பொது மக்களுடைய பங்குத் தொகையாக தலா ரூ.1 இலட்சம் வீதம், சுமார் 1,340 மீனவர்கள் பெயரில் அந்தப் பகுதி அமைச்சர் அவர்கள் அவசர கோலத்தோடு அந்த 1,340 மீனவர்களுடைய ration cards*–ஐக் கொடுத்து, நாகப்பட்டினம் கிராம வங்கியின்மூலம் ரூ.13,40,00,000/– கடனை வாங்கிக் கொடுத்து, அக்கிராம மக்களுடைய பங்குத் தொகையாகச் செலுத்தப்பட்டுள்ளது. ஏற்கெனவே, மீனவ மக்கள் பெற்ற வங்கிக் கடனைச் செலுத்த முடியாமல் இருக்கிற சூழ்நிலையில், தற்போது இந்தக் கடன் தொகையையும் வாங்கி, கடனைச் செலுத்த முடியாமல் அவர்களைக் கடனாளியாக்கி எங்களை நாடி வந்திருக்கிறார்கள். 'எந்த வகையிலாவது எங்களைக் காப்பாற்றவேண்டும்' என்று எங்களிடம் வந்து கோரிக்கை வைத்திருக்கிறார்கள். எந்த மீனவரையும் கடனாளியாக்குகின்ற அரசாக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் தளபதி அவர்களுடைய அரசு இதுவரை விளங்கவில்லை.*

ஆனால், கடந்த ஆட்சிக் காலத்தில் தேர்தல் காலம் என்பதற்காக அவசர கோலமாக அந்த மக்களை மாட்டிவிட்டு, அந்தப் பகுதியிலிருந்த அமைச்சர் செய்திருக்கிறார் என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அவர்களையும் காப்பதற்கு மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்றிருக்கிறோம். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தனியாரிடம் வாங்கி, வங்கியில் deposit செலுத்தியிருக்கிறார்கள் என்று நடந்ததை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள்.

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன்: ஆனால், அதனை அரசே செய்யலாம். அதுகுறித்து, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்றிருக்கிறோம். அந்த மீனவர்களைக் காப்பதற்கான நடவடிக்கைகளையும் நாங்கள் எடுத்து வருகிறோம் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தங்களுக்கு இரண்டு கேள்விகள் முடிந்துவிட்டன. பிறகு வாய்ப்புத் தருகிறேன், பொறுங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. அரவிந்த் ரமேஷ் அவர்கள்.

திரு. ச. அரவிந்த் ரமேஷ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட, கொட்டிவாக்கம், பாலவாக்கம், நீலாங்கரை, ஈஞ்சம்பாக்கம், பனையூர், நைனார்குப்பம் பகுதிகளிலுள்ள மீனவ சமுதாய மக்கள் கடலுக்குச் சென்று மீன்களைப் பிடித்துத் தங்களுடைய வாழ்வாதாரத்தை நடத்தி வருகிறார்கள். அந்தப் பகுதியில் மீன் வலை பின்னும் கூடங்கள் இல்லாத சூழல் இருக்கிறது. அதேபோன்று அப்பகுதியில் மீனவர்கள் ஓய்வெடுக்கின்ற இடமும், பழைய வலைகளைப் பாதுகாக்கும் இடங்களும் இல்லாத சூழல் இருந்துகொண்டிருக்கிறது. அதுகுறித்து, அரசிடம் கேட்டால் அந்தப் பகுதி ஆமைகள் வாழ்கின்ற பகுதியாக இருக்கின்றது எனக் குறிப்பிட்டு, எந்தப் பணிகளும் நடைபெறாத நிலையில் அந்தப் பகுதி இருந்துகொண்டிருக்கிறது. அங்குள்ள சாலைகளெல்லாம் பழுதடைந்துள்ளன. அந்தச் சாலைகளைப் புதுப்பிப்பதற்குக்கூட முடியாமல் மீனவ சமுதாய மக்கள் மிகவும் சிரமமான நிலையில் வாழ்ந்துகொண்டிருக்கின்றனர்.

ஆகவே, ஆமைக் குஞ்சுகள் எங்கு விளையாடுகின்றனவோ, அந்த இடங்களைக் கண்டறிந்து நடவடிக்கை எடுக்கவேண்டும். 20 வருட காலமாக நான் அந்தப் பகுதிகளில் நடைப்பயிற்சி செய்துகொண்டிருக்கிறேன். நான் இதுவரை ஒரு ஆமைக் குஞ்சினைக்கூடப் பார்த்ததில்லை. அங்கு பணிகள் நடைபெறாமல் இருப்பதனால், மீனவர்களின் வாழ்வாதாரத்தைக் கருத்தில்கொண்டு அவர்களுடைய வாழ்வில் ஒளியேற்றுகின்ற வகையில் அதற்கான தடையாணையைப் பெற்று இந்தப் பணிகளையெல்லாம்

2022 ஏப்ரல் 26]

மேற்கொள்ள மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டு, விடைபெறுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அத்தனை குறைகளையும் இந்த வாரத்திலேயே உடனடியாக ஆய்வு செய்து, அங்குள்ள மீனவர்களுக்கு நிவாரணம் தருகின்ற வகையிலே என்னென்ன நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமோ, அந்த நடவடிக்கைகள் எங்களுடைய துறையின்மூலம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் மரியாதைக்குரிய அண்ணன் தளபதியார் அவர்களுடைய உத்தரவின்பேரில் மேற்கொள்ளப்படுமென்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 179, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன், மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.*

179—

நேரடி கொள்முதல் நிலையம்

***449—முனைவர் கோவி. செழியன்:**

மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவிடைமருதூர் தொகுதி, திருப்பனந்தாள் ஒன்றியம், மரத்துறை கிராமத்தில் நேரடி நெல் கொள்முதல் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. அர. சக்கரபாணி, உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத்*